**நீதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு - 2013**

---

நீதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, திரண்ட நிதியத்திலுள்ள மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 2007 யூலை 17 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கை பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கை பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பின் நிலவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நம்பிக்கை பொறுப்பு உறுதியுடன் இணங்காமை

நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம், நம்பிக்கை பொறுப்பாளர்களின் கூட்டங்கள் குறைந்தது ஒவ்வொரு இரண்டு மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நம்பிக்கை பொறுப்பு உறுதியின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 25,904,494 ஆன பற்றாக்குறையுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 10,586,879 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 15,317,615 ஆன மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டியது. மீளாய்வாண்டின் போது ரூபா 5 மில்லியன் திறைசேரி மானியம் பெறப்பட்ட போதிலும் ஏறத்தாழ ரூபா 20 மில்லியனால் உட்கட்டமைப்பு பராமரிப்பு செலவினத்தின் அதிகரிப்பு நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் உட்கட்டமைப்பு பராமரிப்புச் செலவினம் ரூபா 31,706,326 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் மீதான திரண்ட செலவினம் ரூபா 60,120,707 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| களுத்துறை உயர் நீதிமன்ற வலயம் | 9,274,097 | - | 9,573,970 |
| அம்பாந்தோட்டை உயர் நீதிமன்ற வலயம் | 4,755,435 | 1,636,205 | 8,109,445 |

| | | | |
|---|---|---|---|
| சிலாபம்/ புத்தளம் உயர் நீதிமன்ற வலயம் | 1,252,309 | - | 3,876,077 |
| நீதி மன்ற முன்னேற்ற நம்பிக்கை பொறுப்பு நிதிய அலுவலகம் | - | - | 209,081 |
| கொழும்பு உயர் நீதிமன்ற வலயம் | 3,625,827 | 2,828,298 | 11,349,034 |
| குருநாகல் உயர் நீதிமன்ற வலயம் | 7,677,832 | 1,180,988 | 9,507,787 |
| கேகாலை உயர் நீதிமன்ற வலயம் | 1,522,900 | - | 3,915,392 |
| காலி உயர் நீதிமன்ற வலயம் | 1,050,000 | - | 1,113,697 |
| அவிசாவலை உயர் நீதிமன்ற வலயம் | - | - | 372,598 |
| அநுராதபுரம் உயர் நீதிமன்ற வலயம் | - | - | 760,000 |
| யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற வலயம் | 406,000 | - | 406,000 |
| கம்பஹா உயர் நீதிமன்ற வலயம் | 1,610,110 | 5,896,495 | 10,395,810 |
| நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு வலையமைப்புச் செயற்திட்டம் | 531,816 | - | 531,816 |
| மொத்தம் | 31,706,326 | 11,541,986 | 60,120,707 |

**5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்**

நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் செயல் நடவடிக்கை திட்டமும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ள வேண்டிய குறிக்கோள்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீடு**

2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) திட்டமிடல்
(ஆ) பாதீடு